



நீலகிரி மாவட்ட தி.மு.க. அலுவலகம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசினார். உடன் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் கா.ராமசந்திரன், தொகுதி பரமேஸ்குமார், தென்றல் செல்வராஜ் நிர்வாகிகள் உள்ளனர்.

### நீலகிரி மாவட்டத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’

# கழக உறுப்பினர் சேர்ப்புப் பணிகளை முழுமையாக செயல்படுத்த முடிவு!

## மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்!

நீலகிரி, ஆக. 5-

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத் தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு அனைவரையும் வரவேற்றார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர், அரசு கொறடா கா.ராம சந்திரன், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் பரமேஸ்குமார், தென்றல் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்ட பொறுப்பு அமைச்சர் - தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரையாற்றினார்.

மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், தமிழ்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் திராவிட மணி, செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வாசிம் ராஜா, நகரச் செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, சேகரன், ரமேஷ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், தொரை, பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, லியாகத் அலி, வீரபத்திரன், பில்லன், செல்வம், உதயதேவன், ராஜேந்திரன், அமிர்தலிங்கம், வாணீஸ்வரி, மகேஷ், காளிதாசன், பேரூர் கழகச் செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், சஞ்சீவ் குமார், முத்து, ரமேஷ் குமார், சின்னவர், சுப்ரமணி, மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சசிகுமார், கோமதி, ராஜா, எல்கில் ரவி, காந்தல் ரவி, ஆலன், விவேகானந்தன், ரஹமத்துல்லா, ஜெயந்தி, வெங்கடேஷ், பவீஷ், செந்தில்நாதன், அன்வர்அப்துல்லா, ஆல்வின், உமாநாத், ஜெயகுமார், சுரேஷ், பவீஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபு, நாகராஜ், பத்மநாபன், வினோத்குமார், முரளிதரன், நகராட்சி தலைவர்கள் பரிமளா, சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, ஜெயகுமாரி, கௌளரி, சித்ரா தேவி, வள்ளி, சத்தியவாணி, தொ.மு.ச மாவட்டக் கவுன்சில் செயலாளர் ஜெயராமன், போக்குவரத்து தொ.மு.ச. மண்டல பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர்.

கூட்ட முடிவில் மாவட்ட பொருளாளர் நாசர் அலி நன்றி கூறினார்.

**ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்த்தல் பணிகள்!**

கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த படி “ஓரணியில் தமிழ்நாடு” எனும் கழக உறுப்பினர் சேர்ப்புப் பணிகள் நீலகிரி மாவட்டத்தில் நடந்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 690 வாக்குச்சாவடிகளுக்கும் தலைமைக் கழகம் நிர்ணயித்துள்ள இலக்கினை எதிர்வரும் 31.7.2025க்குள் நூறு சதவீதம் நடத்தி முடிப்பது எனவும், நீலகிரி மாவட்டத்தில் முழுமையாக செயல்படுத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**2026 சட்டமன்றத் தேர்தல்**

தமிழகத்தில் 2021 நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று திராவிட மாடல் அரசு அமைந்து சிறப்பான மக்கள் நல திட்டங்களால் நாட்டு மக்கள் பெரிதும் பயன்பெற்று வருகிறார்கள்.

எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலிலும் தமிழ்நாட்டில் “வெல்வோம் 200” - “படைப்போம் வரலாறு” என்கிற இலக்கினை அடைந்திடும் வகையில் சிறப்புடன் செயல்பட்டு, தமிழகத்தில் மீண்டும் கழக அரசு அமைந்திட ஏதுவாக நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை, கூடலூர், குன்னூர் சட்டமன்ற தொகுதிகளில் மகத்தான வெற்றி பெற ஒவ்வொரு கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பணியாற்றுவது என தீர்மானிக்கப்படுகிறது.



திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முசிறி ஊராட்சி ஒன்றியம், வெளியனூர் ஊராட்சி வெங்கடசலபுரம் கிராமத்தில், சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிய ரேஷன் கடை ரூ.9.13 லட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவன் திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள், கிளை செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் அ.ம.மு.க. வினர் கழகத்தில் இணைந்தனர்!

## வி. செந்தில் பாலாஜி - கே.எஸ்.மூர்த்தி முன்னிலையில்!

நாமக்கல், ஆக. 5-

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அ.ம.மு.க. கட்சியினர் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நல்லாட்சி தொடர்ந்திட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையே தேவையென கருதி அம்மா மக்கள் முன்னேற்ற கழக கட்சியைச் சார்ந்த நாமக்கல் தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து சரவணன், மாவட்ட துணைச் செயலாளர் நவலடி லோகேஸ் ஆகியோர் தலைமையில் வெங்கரை பேரூர் செயலாளர் கே.ராதாகிருஷ்ணன், மாவட்டப் பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.யுவராஜ், மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் சபிக்கூர் ரஹ்மான், மாவட்ட அண்ணா தொழிற்சங்கம் மு.தண்டபாணி, மாவட்ட ஓட்டுனர் அணி செயலாளர் வேல்முருகன், மாவட்ட சிறுபான்மை அணி செயலாளர் அப்துல் ரசாக் ஆகியோர் அ.ம.மு.க.விலிருந்து விலகி முன்னாள் அமைச்சரும், மண்டலப் பொறுப்பாளருமான வி.செந்தில் பாலாஜி, நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் ஒன்றியச் செயலாளர் தனராசு, பேரூர் செயலாளர்கள் முருகன், கருணாநிதி, ரமேஷ் பாபு, சோமசுந்தரம், தளபதி சுப்பிரமணியம், சரவணன், கழக நிர்வாகிகள் எஸ்.கே.வி. கருணாநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத் தந்தை

# சேந்தமங்கலம் ஆர்.சிங்காரம் மறைவு!

### கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி, – அமைச்சர் மா.மதிவேந்தன், எம்.எல்.ஏக்கள், கழக நிர்வாகிகள் அஞ்சலி

நாமக்கல், ஆக. 5 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத் தந்தையும், சேந்தமங்கலம் பேரூர் கழக அவைத் தலைவருமான ஆர்.சிங்காரம் நேற்று முன்தினம் (03.08.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை இயற்கை எய்தினார்.

மறைந்த சிங்காரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றி உள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாட்டுடன் இருந்த அவர் தனது அரசு பணி ஓய்வுக்கு பிறகு சேந்தமங்கலம் பேரூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவைத் தலைவராக பொறுப்பேற்று கடந்த 15 ஆண்டுகளாக பணியாற்றி வந்துள்ளார். இவருக்கு விஜயா என்ற மனைவியும், அருண், விஸ்வநாத் என்ற இரு மகன்களும் உள்ளனர்.

இதில் இளைய மகன் விஸ்வநாத், நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளராக இருந்து வருகிறார்.



மறைந்த அன்னார் சிங்காரம் அவர்களுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், முன்னாள் மாவட்டச் செயலாளர் செ.காந்திசெல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ. ராமலிங்கம் கே.பொன்னுசாமி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ஜோயல், சீனிவாசன், ஆனந்த குமார் மற்றும் மாநில, மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகி கள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்டோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை மிசா கு. பாலகிருட்டிணன்
### ஆகஸ்ட் 5 (2013)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, மன்னார்குடி நகரச் செயலாளர் – மன்னார்குடி வட்டக் கழகச் செயலாளர் – தஞ்சை மாவட்ட பொருளாளர் – திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர் – பொதுக்குழு உறுப்பினர் என பல பொறுப்புகளை வகித்து, முழுநேர கழகப் பணியாற்றியவர்.

கொத்தங்குடி ஊராட்சி மன்றத் தலைவராகவும், மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் பொறுப்பேற்று, அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதுடன், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கடுங்காவல் தண்டனையும் – மிசா கைதியாக ஓராண்டு சிறைத் தண்டனையும் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## வாட்ஸ் அப்பில் வலம் வருவது!




# கலைஞர் போல் யாருண்டு?

செங்கோல் ஒரு கையில்
எழுதுகோல் ஒரு கையில்
ஏந்தியே சனாதனம் எதிர்த்திருப்பார்

அரியணை அமர்ந்தாலும்
எதிரணி அமர்ந்தாலும்
தன்மானம் தொலைக்காமல்
துணிந்திருப்பார்

கவி அரங்கம் என்றாலும்
புவி அரங்கம் என்றாலும்
காவியைப் பல காதம் ஓடவைப்பார்

கோட்டையில் இருந்தாலும்
கோபாலபுரம் இருந்தாலும்
காட்சிக்கு எளியனாய் மகிழ வைப்பார்

தொண்டர்கள் வந்தனையோ
எதிரிகள் நிந்தனையோ
எல்லோர்க்கும் அன்பையே
அள்ளிவைப்பார்

உள்நாடு என்றாலும்
வெளிநாடு சென்றாலும்
செம்மொழித் தமிழுக்கே உயர்வளிப்பார்

நண்பர்கள் ஒருபக்கம்
துரோகிகள் மறுபக்கம்
இருந்தாலும் கலங்காமல் செயல் புரிவார்

பூமாலை தோளிலே
முள்கிரீடம் தலையிலே
சுமந்தாலும் ஓய்வின்றி உழைத்திருப்பார்



புகழ்மொழி கேட்டாலும்
இகழ்மொழி கேட்டாலும்
எல்லாமே சமமாக உணர்ந்திருப்பார்

வெற்றிகள் பெற்றாலும்
தோல்விகள் பெற்றாலும்
எப்போதும் வானம்போல் உயர்ந்திருப்பார்


கலைஞர் போல் யாருண்டு?
கலைஞர் வாழ்வார் பல நூற்றாண்டு!!!



**ஆண்டாள் பிரியதர்ஷினி**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஆர். இராமசாமி
### ஆகஸ்ட் 5 (1971)



திராவிட இயக்க காலத்திலிருந்து அண்ணா – கலைஞர் ஆகியோரின் கலையுலகப் பயணத்தில் கிடைத்த மாணிக்கம். நடிப்பிலும், பாடுவதிலும் சிறந்து விளங்கியவர். ‘நடிப்பிசைப்புலவர்’ என நாட்டு மக்களால் அழைக்கப்பட்டவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களில் ஒருவராக விளங்கியவர். கழகப் பொதுக்குழு உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தி.மு.கழக துவக்க காலம் முதல் கழகத்திற்காக கலையுலகில் ஈட்டிய புகழையும், பொருளையும் அர்ப்பணித்தவர்.

தேர்தல் களத்தில் கழகம் ஈடுபட்ட வேலைகளில் தீவிரமாகப் பிரச்சாரப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.

“பழகுதற்கு இனியவர், பகுத்தறிவுச் சுடர், பாசத்திற்குரிய நண்பர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**